**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. No. 206/2022**

**Date : 17.04.2026**

**வா.சா. 1 - சொரிமுத்து**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

ட்ரஸ்டில் இருந்து எனக்கு 50 சென்ட் சொத்து விலைக்கு தந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி 50 சென்ட்டின் சர்வே எண் என்ன என்றால் ஞாபகம் இல்லை. 1ம் பிரதிவாதி ட்ரஸ்டுக்கு பல ஏக்கர் நிலம் பல சர்வே எண்களில் சொந்தமாக உள்ளது என்றால் சரிதான். வாசாஆ 26 குறுந்தகடு யார் தயாரித்தது என்றால் எனது தம்பி காளியப்பன் தொலைபேசியில் எடுத்தது. மேற்படி வாசாஆ 26 எந்த தேதியில் எடுக்கப்பட்டது என்றால் சுமார் 2, 3 மாதங்கள் இருக்கும். மேற்படி வாசாஆ 26 குறுந்தகடின் புகைப்படங்கள் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

மேற்படி எனது தம்பி காளியப்பனுக்கு தான் வாசாஆ 26 -ல் எத்தனை புகைப்படம் உள்ளது என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தில் தற்போது என்ன இருக்கிறது என்றால் வழக்கு தாக்கல் செய்த பின்பு ேஹாட்டல் வைத்து நடத்தி வருகிறார்கள். மேற்படி ேஹாட்டல் வைத்து நடத்தி வருகிறார்கள் என்ற விவரத்தை வழக்குரையிலோ பிராமாண வாக்கு மூலத்திலோ குறிப்பிப்பிடப்படவில்லை என்றால் தற்போது 2 மாதங்கள் தான் நடைபெற்று வருகிறது. இவ்வழக்கு சொத்தினை மீட்டு எடுப்பதற்கான பரிகாரம் கேட்காமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாசாஆ 26 -க்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை நான் வழக்கிற்காக தயார் செய்த ஆவணம் என்றால் சரியல்ல.

எனது வழக்குரையிலோ பிராமாண வாக்கு மூலத்திலோ வாசாஆ 26 என்றைய தினம் எங்கு வைத்து யாரால் எடுக்கப்பட்டது என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. வாசாஆ 27 ஆவணம் நான் நாகராஜன் மற்றும் காளியப்பன் ஆகியோர் சேர்ந்து ட்ரஸ்டுக்கு கொடுத்த மனுவின் நகல் என்றால் சரிதான். மேற்படி வாசாஆ 26 ல் குறிப்பிட்டுள்ள தேதி 11.07.2025 என்றால் சரிதான். வாசாஆ 27 ஏற்கனவே தயார் செய்து விட்டு பின்பு ஊர்க்காரர்களிடம் கையெழுத்து வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல.

வாசாஆ 27 எண் 33 முதல் 40 வரை யாரும் கையெழுத்து இடவில்லை என்றால் சரிதான். வாசாஆ 27 க்கு முன்பாக சொத்தினை கோரி ட்ரஸ்டிடம் எவ்வித அறிவிப்போ மனுவோ கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அறிவிப்பு கொடுத்தோம். அவர்கள் சொத்தினை தராததால் வழக்கு தாக்கல் செய்தோம். மேற்படி வழக்கின் எண் என்ன என்றால் இவ்வழக்கு தான். இவ்வழக்கில் சொத்தினை ட்ரஸ்டிடம் இருந்து விலக்கி எழுதித் தரவேண்டும் என்று கேட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் இவ்வழக்கில் சொத்தினை ட்ரஸ்டிடம் இருந்து விலக்கி எழுதித் தரவேண்டும் என்று பரிகாரம் கேட்கவில்லை நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

வழக்கு பட்டிகை சொத்தில் நான் தற்போது அனுபவத்தில் இல்லாததால் வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. வாசாஆ 27 நான் போலியாக தயார் செய்த ஆவணம் என்றால் சரியல்ல. சர்வே எண் 467/8-ல் உள்ள 50 சென்ட் சொத்தினை பல உறுப்பினர்களுக்கு கிரையம் கொடுத்தார்கள் என்றால் சரிதான். வாசாஆ 28 ஆவணம் உஷா என்பவர் ட்ரஸ்டிடம் சொத்தினை கேட்டு தாக்கல் செய்த மனு என்றால் சரிதான். வாசாஆ 28 தேதி 03.12.2000 என்றால் சரிதான். சர்வே எண் 467/8 ல் எத்தனை சென்ட் சொத்து உஷா க்கு கொடுக்கப்பட்டது என்றால் தெரியாது. சர்வே எண் 467/8 ல் உள்ள

சொத்து உஷாவிற்கு விலைக்கு கொடுக்கப்பட்டதா என்றால் ஆம். எந்த வருடம் விலைக்கு கொடுக்கப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

வாசாஆ 28 படி உஷாவிற்கு சொத்தினை கிரையம் கொடுப்பதற்கு 1ம் பிரதிவாதி ட்ரஸ்ட் சம்மதிப்பதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வாசாஆ 28 ற்கும் வழக்கு பட்டிகை சொத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இ,ல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி ட்ரஸ்டினை கஷ்டப்படுத்தும் நோக்கில் இவ்வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**